

**நூறு மரங்களுக்குமான பொறுப்பாளர்கள்**

"ஊருக்கு நூறு மரம் வளர்ப்போம்"
வேம்பு எனும் மூலிகை மரம்

மேக்ட் வேர்கள் குழந்தைகள்
இயக்கம்
**கவரப்பட்டி**





# வேர்களின் குரல்

குழந்தைகளின் உரிமைகளை நிலைநாட்டுவதற்கான இதழ்

தை - திருவள்ளுவர் ஆண்டு 2041 (சனவரி - 2010) வேர் -2 குரல் - 5



## புத்தாண்டு பொங்கல் வாழ்த்துகள்

# வாழ்த்துகள்...

அன்புள்ள மேக்ட் வேர்கள் குழந்தைகள் இயக்க குழந்தைகளே! தங்களின் **வேர்களின் குரல்** இதழ் ஓர் ஆண்டு நிறைவுற்று இரண்டாம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது. அதற்காக உங்கள் அனைவரையும் வாழ்த்துகின்றேன். நீங்கள் கடந்த ஆண்டு எடுத்த பல தொடர் செயல்பாடுகள் பாராட்டுதற்குரியதாகும். குறிப்பாக புகையிலைக்கு எதிரான நிகழ்வுகள், உலகம் வெப்பமடைவதை தடுப்பதற்கான நிகழ்வுகள், 'ஊருக்கு நூறு மரம் வளர்ப்போம்' செயல் திட்டத்தின் வளர்ச்சி படிகள் மிகவும் சிறப்பானதாகும்.

நடந்து முடிந்த கோபன் எகன் புவி வெப்பமடைதல் குறித்த ஐக்கிய நாடுகள் மாநாடு ஒருவகையில் தோல்வியை தழுவியிருந்தாலும் புவி வெப்பமடைவது குறித்தும், அதற்கு நாம் உடனடியாக செயல்பட வேண்டியதன் அவசியம் குறித்தும், உலக மக்களின் விரிவான பார்வைக்கு வந்திருப்பதில் மகிழ்ச்சியே.

வரும் ஆண்டுகளில் பருவநிலை மாற்றத்தின் பாதிப்புகளை மூன்றாம் உலகநாடுகள் அதிகமாக எதிர்கொள்ள இருக்கின்றன என்பது நமக்கான சவாலாகும். குறிப்பாக மாலத்தீவு, துவாலு போன்ற பல தீவுகள் இல்லாமலேயே போகக்கூடிய சூழல் என்பது மிகவும் வேதனை தரக்கூடியதாகும்.

எனவே நமதளவில் நமது பணியினை விரைவாக செய்ய வேண்டிய காலகட்டத்தில் நாம் இருக்கின்றோம். உங்களது இயக்கப் பணிகள் சிறப்புற வாழ்த்துகள்.

உங்கள் அனைவருக்கும் மேக்ட் சமூகப் பணி மற்றும் ஆய்வு மையத்தின் சார்பில் **இனிய புத்தாண்டு, பொங்கல் நல் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.**

*வாழ்த்துகளுடன்,*
**த.சிரில் அலெக்சாண்டர்,**
நிர்வாக இயக்குநர்



**வேர்களின் குரல் இதழின் ஆசிரியர் குழு (2009–2010)**



*கதைகள்*

## குமரனும் குதிரையும்

ஒரு ஊரில் குமரன் என்ற ஒருவன் இருந்தான். அவனுக்கு குதிரையில் சவாரி செய்ய அதிக ஆசை. ஆனால் அவனிடம் பணம் இல்லை. ஒருநாள் ஒரு தேவதை அவன் முன் தோன்றியது. அவன் தேவதையைக் கண்டு, அட என் முன்தேவதையா? என் கண்ணை என்னால் நம்ப முடியவில்லையே என்று வியந்தவனிடம் 'உனக்கு என்ன வேண்டும் சொல் நான் உனக்குத் தருகிறேன்' என்று தேவதை சொல்ல அவன் அழகான குதிரை வேண்டும் என்று சொன்னான். தேவதை அவனுக்கு குதிரையை கொடுத்து விட்டு கிளம்ப போனது. அப்போது அவன் தேவதையிடம் இந்தக்குதிரை **'அம்மாடியோ'** என்றால் நிற்கனும்! **'அப்பாடா'** என்றால் ஓடனும் என்று சொன்னான். தேவதை அப்படியே நடக்கும் என்று கூறியவுடன் மறைந்தது. அவன் குதிரை மேல் ஏறி அப்பாடா என்று கத்தினான். குதிரை வேகமாக ஓடியது. ஒரு மலையின் உச்சிக்கு சென்றது. அவன் உடனே அம்மாடியோ என்றான் குதிரை நின்றது. குதிரை நின்றுவிட்டதால் அப்பாடா என்று கூறி நிம்மதி பெருமூச்சு விட்டான். அதை கேட்ட குதிரையோ மீண்டும் வேகமாக ஓடி மலைபள்ளத்தில் விழுந்தது. அய்யய்யோ அய்யய்யோ என அலறியபடியே பாயிலிருந்து எழுந்தான் கனவு கலைந்துவிட்டது. அப்பாடா என்றான் நிம்மதியாக.



**வெ. பாலயோகி,** வயது – 11, கள்ளிப்பட்டி

## கோழிகள்

ஒரு நாள் ஒரு கோழி இரைதேடிக் கொண்டிருந்தது. கோழிக்கு அப்பொழுது சோளமணி கிடைத்தது. அதை எடுக்கப்போகும் முன்னே வேறு ஒரு கோழி எடுத்துக்கொண்டது. முதல் கோழி எனக்குத்தான் சோளம், நான்தான் முதலில் பார்த்தேன் என்றது. இல்லை இல்லை அது எனக்குத்தான் என்றது இரண்டாவது கோழி. இவ்வாறு இரு கோழிகளும் சண்டைப் போட்டுக்கொண்டு இருந்தன. அதைப் பார்த்த சேவல் ஏன் இப்படி சண்டைப் போட்டுக் கொண்டிருக்கிறீர்கள்? என்று கேட்டது. அதற்கு முதல் கோழி இந்த சோளமணியை நான்தான் முதலில் பார்த்தேன். ஆனால் அந்தக் கோழி அதை எடுத்துக் கொண்டது என்றது. மற்றொன்று இல்லை, இல்லை நான்தான் முதலில் எடுத்தேன் என்றது. ஏன் இந்த சோளமணிக்காக சண்டை போட்டுகொண்டு இருக்கிறீர்கள். சண்டையை நிறுத்துங்கள். இருவரில் யாராவது ஒருவர் விட்டுக்கொடுக்கக்கூடாதா? என்று சேவல் கூறிவிட்டு தன்னிடமுள்ள ஒரு சோளமணியை கொண்டு வந்தது. அதை முதல் கோழியிடம் கொடுத்தது. அன்று முதல் மூன்று கோழிகளும் சிறந்த நண்பர்களாயின. மூன்றும் ஒற்றுமையுடன் இரையை பகிர்ந்து உண்டன. இக்கதை மூலம் நமது நண்பர்களுக்குள் எப்போதும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதைக் கற்றுக்கொள்வோம்.





**க.சினுப்பிரியா,** வயது – 10, கள்ளிப்பட்டி

# விடுகதை

1. சின்ன சின்ன கதவு சிங்காரக்கதவு தச்சர் செய்யாத கதவு மூடி மூடி திறக்கும் கதவு அது என்ன?

**ப. பன்னீர்செல்வம்** வயது 11, பா. பூசாரிபட்டி

2. தங்க மாம்பழம் திங்க முடியல அது என்ன ?
3. மருத்துவர் வந்தார் ஊசி போட்டார் காசு வாங்காமல் போனார் ? அவர் யார் ?

**ப. பிரகாஷ்** வயது 10, பா. பூசாரிபட்டி

4. வேர் இல்லாத மரம் என்ன மரம் ?

**செ. செல்வபாரதி** வயது 10, பா. பூசாரிபட்டி

5. சிங்குடி முக்குடி செம்மறிகுட்டி ரத்தம் இல்லாத நெய்க்குட்டி, அது என்ன ?
6. தெக்கு திண்ணையில் திண்ணை மொழுகும் பெண்ணே உன் கன்னத்தில் என்ன ஆயிரம் சொள்ளை, அது எது ?
7. வாய்க்கால் தண்ணி வத்த வத்த செம்மறி கெடாய் முத்த முத்த அது என்ன ?

**சிவசக்தி** வயது 10, பா. பூசாரிபட்டி

8. காலால் தண்ணி குடிக்கும் கொக்கரக்கோ கோழி கழுத்துல முட்டை இடும் கொக்கரக்கோ கோழி அது என்ன ?

**ப. அருண்செல்வன்** வயது 12, குட்டியப்பட்டி

9. அடுக்கடுக்கா இலை இருக்கும் ஆல இலையும் இல்லை முத்து முத்தா பூ பூக்கும் முருங்கப் பூவும் இல்லை கோன கோன காய்காய்க்கும் கொளிஞ்சி காயும் இல்லை அது என்ன ?

**ப.விஜய்,** வயது 10, குட்டியப்பட்டி

10. இத்துனுண்டு சித்தாண்டி ஓடி ஓடி வேலி அடைக்கிறான் அது என்ன ?
11. உயிரினங்களில் இரவும் பகலும் தூங்காமல் இருப்பது என்ன?

**ந. அன்பழகன்,** வயது 17, இராசாளிபட்டி

12. பேச முடியாத வாய் எது ?
13. உட்கார முடியாத தரை எது?
14. கி.பி. 500 இல் உலகம் எப்படி இருந்தது ?

**வெ. பாலயோகி,** வயது 11, கள்ளிப்பட்டி

15. ஓங்கி வளர்ந்தவள் ஒரு பிள்ளை மட்டும் பெற்றாள் அவள் யார் ?
16. கொடுக்க முடியும் எடுக்க முடியாது அது என்ன?

**மகாலெட்சுமி,** வயது 12, கல்லுக்காட்டுப்பட்டி.

**விடை :** 9 ஆம் பக்கம் பார்க்கவும்.



**வேர்களின் குரல்**
குழந்தைகளின் உரிமைகளை நிலைநாட்டுவதற்கான இதழ்

இதழாசிரியர் :
ச. சுபத்ரா
ஆசிரியர் குழு :
அ. அருண்குமார்
கா. இராகவேந்திரன்
ம. முத்துலெட்சுமி
ம. சந்திரகுமார்
இரா. புவனேஸ்வரி
ரமணி
அ.மணிமேகலை
செ.சந்தியா
லோகேஸ்வரி
பொ.கார்த்திகேயன்
ர. சத்யா
ஆ. ஜெயபால்
த. கவியரசன்
ஒளிபடம் :
த.முனேந்திரன்
வடிவமைப்பில் உதவி :
முனைவர். இரா.ஜாக்குலின் மேரி

பொறுப்பாசிரியர் :
**த. சிரில் அலெக்சாண்டர்**

வேர் 2
குரல் 5
காலாண்டு இதழ்

(தனி சுற்றுக்கு மட்டும்)
தை மாதம்
திருவள்ளுவர் ஆண்டு 2041
(சனவரி - 2010)

தொடர்புக்கு :
**வேர்களின் குரல்**
மேரி ஆனி சேரிட்டி ட்ரஸ்ட் (மேக்ட்)
கதவு எண்.8,
பிளாட் எண். 39,
ஸ்டார்லிங் அப்பார்ட்மெண்ட்,
அக்பராபாத் இரண்டாம் தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
தொலைபேசி : 044 24721579
மின்னஞ்சல் : vergalinkural@gmail.com

*ஆசிரியர் பக்கம்*

அன்பார்ந்த குழந்தைகளுக்கும், பெரியோர்களுக்கும், அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எங்கள் ஆசிரியர் குழுவின் சார்பில் **புத்தாண்டு, பொங்கல் நல் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம்.**

இந்த ஐந்தாம் இதழுடன் எங்களது வேர்களின் குரல் வெற்றிகரமாக இரண்டாம் ஆண்டினில் அடியெடுத்து வைக்கிறது என்பதை நினைக்கும்போது எங்கள் மனம் மிகவும் மகிழ்ச்சியடைகிறது. குழந்தைகள் இயக்க உறுப்பினர்களுக்கான இதழியல் பயிற்சி ஆஸ்மே நிறுவனத்தால் 2008ஆம் ஆண்டு மே மாதம் அளிக்கப்பட்டது. அதில் அருணோதயா குழந்தைகள் சங்க குழந்தைகளும், சகோ.சிகா குழந்தைகள் சங்க குழந்தைகளும், காந்திகிராம பாலர் சபை குழந்தைகளும், மேக்ட் வேர்கள் குழந்தைகள் இயக்க குழந்தைகளும் பங்கேற்றோம்.

ஐந்து நாட்கள் நடைபெற்ற இதழியல் பயிற்சியில் நாங்கள் பல்வேறு கருத்துகளைக் கற்றுக் கொண்டோம். அந்த பயிற்சியில் பல பயிற்சியாளர்கள் எங்களுக்கு பயிற்சி அளித்தனர். அவர்கள் அனைவருக்கும் எங்கள் ஆசிரியர் குழுவின் சார்பில் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். அந்த பயிற்சியை அளித்த ஆஸ்மே நிறுவனத்திற்கும் அதனுடைய ஒருங்கிணைப்பாளர் திரு. ம.ஆன்ரூ சேசுராஜ் ஐயா அவர்களுக்கும், அந்த பயிற்சியில் எங்களை பங்குபெறச் செய்த எங்கள் மேக்ட் மையத்தின் இயக்குநரான திரு.த.சிரில் அலெக்சாண்டர் ஐயா அவர்களுக்கும், அந்த பயிற்சியை வழி நடத்திய பயிற்சி ஒருங்கிணைப்பாளர் அண்ணன் சா. செல்வக்குமார் அவர்களுக்கும், அந்த பயிற்சிக்கு எங்களை அழைத்துச் சென்ற எங்கள் பணியாளர்களுக்கும் எங்கள் ஆசிரியர் குழுவின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். இந்த இதழில் 350 பரப்புரை பற்றிய பகிர்வும், இப்பரப்புரை தொடர்பான நாளிதழ் பதிவுகளும், பொங்கல் விழாவை ஏன் கொண்டாட வேண்டும். மேக்ட் பற்றிய ஒரு பார்வை, குழந்தைகளின் படைப்புகள் ஆகியவற்றை வெளியிட்டுள்ளோம்.

வாழ்த்துகளுடன்... உங்கள்

**ச.சுபத்ரா,**
இதழாசிரியர்,
வயது 15, இராசாளிபட்டி.
மாநில ஒருங்கிணைப்பாளர்,
புகையிலை இல்லா உலகம் நோக்கிய குழந்தைகளின் கூட்டமைப்பு, தமிழ்நாடு.





# புவி வெப்பத்தை கட்டுப்படுத்த பசுமை இல்ல வாயுக்களின் அடர்த்தி 350இன் அவசியத்தை வலியுறுத்தி நடைபெற்ற பரப்புரையின் பதிவுகள்

கடந்த 24.10.09 அன்று காலை 10.00 மணி முதல் மதியம் 01.00 மணி வரை மேக்ட் வேர்கள் குழந்தைகள் இயக்கத்தின் சார்பில் முக்கிய இடங்களில் பரப்புரை நடைபெற்றது. அவற்றின் விவரம் பின் வருமாறு.

| மேக்ட் வேர்கள் குழந்தைகள் இயக்க மாவட்ட கூட்டமைப்பு | பரப்புரை நடைபெற்ற இடம் |
|---|---|
| 1. புதுக்கோட்டை | விராலிமலை பேருந்து நிலையம் |
| 2. திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி மத்திய பேருந்து நிலையம் |
| 3. சென்னை | சென்னை மத்திய நினைவு அரங்கம் |
| 5. திருவள்ளூர் | பூந்தமல்லி பேருந்து நிலையம் |

பரப்புரை நடைபெற்ற நான்கு இடங்களிலும் மேக்ட் வேர்கள் குழந்தைகள் இயக்க உறுப்பினர்கள். பசுமையை வலியுறுத்தும் வகையில் உடலில் வேப்பிலையைச் சுற்றியும், 350 என்று எழுதபட்ட அட்டையை உடலில் மாட்டியும், பொதுமக்களிடம் துண்டறிக்கை கொடுத்துப் பரப்புரை செய்தனர். மேற்கண்ட பரப்புரையின் ஒளிப்படப் பதிவுகளையும் நாளிதழ்களின் பதிவுகளையும் பின்வருமாறு கொடுத்துள்ளோம்.





*மேக்ட் பணிகள் பற்றிய ஒரு பார்வையில்*

# குழந்தைகள் இல்லம்

சென்னை புறநகரப் பகுதிகளில் பல்வேறு காரணங்களுக்காக குடியிருப்புகள் கட்டாயமாக அகற்றப்பட்டதால் சாதாரண மக்கள் தங்கள் வாழ்வாதாரங்களை இழந்து பாதிவித்து வருகின்றனர். இந்த ஆக்கிரமிப்புப் பணியில் பாதிக்கப்பட்ட குழந்தைகளில் ஒன்பது குழந்தைகள் மேக்ட் நிறுவனத்தின் அரவணைப்பில் வளர்ந்து வருகின்றனர்.



இக்குழந்தைகள் அனைவரும் இராசாளிப்பட்டியில் உள்ள அரசுப் பள்ளியில் கல்வி பயின்று வருகின்றனர். இவர்களை மேக்ட் நிறுவனத்தின் அரங்காவலர்களில் ஒருவரும் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியருமான **திருமதி. ஜூலியா மேரி** அவர்களும், ஓய்வு பெற்ற ஆசிரியர் **திருவாளர் தனிஸ்லாஸ்** அவர்களும் இணைந்தே இக்குழந்தைகளை கவனமுடன் பாதுகாப்பாக வளர்க்கும் பணியை செய்து வருகின்றனர். மேக்ட் நிறுவனத்தின் பணிகளில் தங்களையும் ஈடுபடுத்தியுள்ள இவ்விருவரையும் மேக்ட் நிறுவனம் மனதார பாராட்டுகிறது.

திருமதி. சாரதா
மேற்பார்வையாளர், வாசிப்புப் பயிற்சி, மேக்ட்


| விடுகதைகளுக்கான விடைகள் | 1. கண்இமை, 2. நெருப்பு, 3. கொசு, 4. தந்திமரம், 5. ஈசல், 6. தோசை, 7. குழிப்பணியாரம், 8. கத்தரிச்செடி, 9. எருக்கஞ்செடி, 10. ஊசி, 11. மீன், 12. செவ்வாய், 13. புளியோதரை, 14. உருண்டையாக, 15. வாழைமரம், 16. கல்வி. |
|---|---|

# பொங்கல் விழாவை
## நாம் ஏன் கொண்டாட வேண்டும் ?



தை மாதம் முதல் நாள் தமிழர்களின் புத்தாண்டு அன்று தான் பொங்கல் விழாவையும் கொண்டாடுகிறோம். பொதுவாக தமிழர்களாகிய நாம் அனைவரும் பெரும்பான்மையாக விவசாயத்தைச் சார்ந்து வாழ்பவர்கள் விளைச்சல் வீடு வரும் நாள்தான் தமிழர்களின் இல்லத்திலும் உள்ளத்திலும் மகிழ்ச்சி பொங்கும் நாளாகும்.

இம்மகிழ்வுக்கு காரணமான உழைப்பாளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையிலும், விவசாயத்தில் ஈடுபட்ட கால்நடைகளுக்கு நன்றி தெரிவிக்கும் வகையிலும், இயற்கைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் நிலம், நீர், காற்று, கதிரவன், வானம் ஆகியவற்றிக்காக பொங்கல் விழா கொண்டாடப்படுகிறது.




**"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்**

**தொழுதுண்டு பின்செல் பவர்"**

**விளக்கம் : உழவுத்தொழில் செய்து உணவை உற்பத்தி செய்பவரே வாழ்பவராவர். மற்றவரெல்லாம் அவர்களை சார்ந்து வாழ்பவர்களாவர்.**

என்ற பொன்வரிகளை எழுதிய நமது தமிழ்ச்சான்றோர் திருவள்ளுவரின் பிறந்த நாளாக தை இரண்டாம் நாள் கொண்டாடப்படுகிறது. மாடுகளை மகிழ்வூட்டும் வகையில் மாட்டுப் பொங்கல் கொண்டாடப்படுகிறது.



கிராமங்களில் பொங்கல் விழாக்களில் பலவகை கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். பல கிராமிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும். மஞ்சுவிரட்டு போன்ற மாடு பிடி விழாக்களும் நடைபெறும். குழந்தைகள், பெரியவர்கள், முதியவர்கள் என அனைவரும் புத்தாடை உடுத்தி புதிய மண்பானையில் புத்தரிசியிட்டு பொங்கல் செய்து அதோடு செங்கரும்பினையும் தங்கள் உறவினர்கள் நண்பர்களுக்கு கொடுத்து தாங்களும் குடும்பத்துடன் உண்டு மகிழ்வார்கள்.

தை மாதத்தில் பொருளாதார நிலையில் வளமுடன் இருக்கும் காலம் என்பதால், திருமணம், காதணி விழா போன்ற நிகழ்வுகளும் இம் மாதத்தில் தான் நடத்தப்படுகிறது. இதனால்தான் **"தை பிறந்தால் வழி பிறக்கும்"** என்ற பழமொழியே தோன்றியது.



மற்ற எல்லா விழாக்களும் தமிழர்களுக்கு நெருங்கிய தொடர்பு இல்லாமல் இருந்தாலும் பொங்கல் விழா மட்டும் மிக நீண்ட வரலாற்றுத் தொடர்பினைக் கொண்டுள்ளது. எனவே பொங்கல் விழாவினை நாம் பெருமையோடு கொண்டாடுவோம்.

**அ. அருண்குமார்,** வயது 15,


மாவட்ட பொருளாளர், மேகாட்டான்பட்டி(பா.பூசாரிபட்டி)
புதுக்கோட்டை மாவட்டம்.



## புவி வெப்பமடைதல்குறித்த பரப்புரையும் அவற்றின் காட்சிப் பதிவுகளும்



### துண்டறிக்கையின் மாதிரி



















**வாழ்த்துகிறோம்.**

**மேக்ட் மையத்தின் நிர்வாக இயக்குநர் திரு. த. சிரில் அலெக்சாண்டர் அவர்கள் டென்மார்க் நாட்டின் தலைநகர் கோபன் எகனில் 07.12.2009 முதல் 18.12.2009 வரை நடைபெற்ற கால நிலை குறித்த (புவி வெப்பமடைவதைத் தடுத்தல்) மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்.**



தினத்தந்தி சென்னை 26-10-2009

### விழிப்புணர்வு பேரணி



பூந்தமல்லி, அக்.26–

மனிதர்கள் அன்றாடம் பயன்படுத்தும் பெட்ரோல், டீசல், நிலக்கரி ஆகியவற்றால் கரியமில வாயுவின் அடர்த்தி அதிகரித்து பூமி வெப்பமடைகிறது. இதனால் இயற்கை சீற்றங்கள் நிகழ வாய்ப்புகள்ளது. எனவே இயற்கை சீற்றத்தை தடுக்க வீட்டுக்கு ஒரு மரம் வளர்க்க வேண்டும் என்பதை வலியுறுத்தி மேக்ட் குழந்தைகள் கூட்டமைப்பு சார்பில் மரம் வளர்ப்பதன் அவசியம் மற்றும் இயற்கை சூழலை பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வு பிரசாரத்தை பூந்தமல்லி பஸ் நிலையம் அருகே நடத்தினர். இதில் பள்ளி குழந்தைகள் தங்களது உடலில் வேப்பிலையை கட்டி கொண்டு மரம் வளர்ப்பதன் அவசியம் குறித்து பிரசாரம் செய்தனர்.

பிசாரத்தில் மாநில ஒருங்கிணைப்பாளர் சாரா, ஒருங்கிணைப்பாளர் இந்திரா, வின்செண்ட் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தினத்தந்தி திருச்சி 26-10-2009

### மாணவர்கள் போராட்டம்



பூமி வெப்பமடைவதால் உலகம் அழியும் அபாயம் அதிகரித்து வருகிறது என்பது குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் திருச்சி மத்திய பஸ் நிலையத்தில் மாணவ-மாணவிகள் இலை தழைகளை உடலில் கட்டிக் கொண்டு கோஷமிட்ட காட்சி.

ஞாயிற்றுக்கிழமை, 25 அக்டோபர், 2009

தினமணி, திருச்சி 13

### புவி வெப்பமடைதலைத் தடுக்க...



புவி வெப்பமடைதலைத் தடுக்க வலியுறுத்தி, திருச்சி மத்திய பேருந்து நிலையத்தில் சனிக்கிழமை விழிப்புணர்வுப் பிரசாரம் மேற்கொண்ட தமிழ்நாடு மேக்ட் வேர்கள் குழந்தைகள் இயக்கக் கூட்டமைப்பினர்.

2 தினகரன் திருச்சி 25 அக்டோபர் 2009

புவி வெப்பமடைதலை தடுக்க

### வேப்பிலை கட்டி சிறுவர்கள் பிரசாரம்

திருச்சி, அக். 25: புவி வெப்பமடைதல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக சிறுவர், சிறுமிகள் உடலில் வேப்பிலை களை கட்டிக் கொண்டு நேற்று பிரசாரம் மேற்கொண்டனர்.

வளி மண்டத்தில் கார்பன் வாயுக்களின் அடர்த்தி அதிகரிப்பதால் புவி வெப்பம் அதிகரித்துக் கொண்டே வருகிறது. தற்போது 389 பிபிஎம் ஆக இருக்கும் இந்த அடர்த்தி, 450 பிபிஎம் அளவை தாண்டி விட்டால் பூமியில் வாழும் எல்லா உயிரினமும் அழிந்து விடும். எனவே இதை 350 பிபிஎம்க்குள் குறைக்க உலக நாடுகள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இதற்காக டிசம்பர் 7 முதல் 18ம் தேதி வரை டென்மார்க்கின் கோபன்எகன் நகரில் உலக நாடுகள் பங்கேற்கும் மாநாடு நடக்கிறது. இம் மாநாட்டில் '350 பிபிஎம்' முக்கிய கருப்பொருளாக எடுத்துக் கொள்ளப்பட்டது.இது பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மேக்ட் வேர்கள் குழந்தை கள் இயக்க கூட்டமைப்பு சார்பில் நேற்று திருச்சி, புதுக்கோட்டை, உட்பட பல இடங்களில் விழிப்புணர்வு பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது.

திருச்சி மத்திய பஸ் நிலையத்தில் பிரசாரம் மேற்கொண்ட சிறுவர், சிறுமிகள் தங்கள் உடலில் வேப்பிலைகளை கட்டிக் கொண்டு புவி வெப்பமடைதல் குறித்த விழிப்புணர்வு நோட்டீசுகளை விநியோகித்தனர்.

மாவட்டம்



புவி வெப்பமாதல் குறித்து மக்களிடம் எடுத்துக்கூறும் வகையில், 'மேக்ட்' வேர்கள் குழந்தைகள் இயக்க கூட்டமைப்பு சார்பில் திருச்சி, புதுக்கோட்டை, சென்னை, காஞ்சிபுரம் உள்ளிட்ட இடங்களில் நேற்று விழிப்புணர்வு பிரசாரம் நடந்தது. திருச்சி மத்திய பஸ் நிலையத்தில் பிரசாரம் நடத்திய சிறுவர், சிறுமிகள் உடலில் வேப்பிலைகளை கட்டிக் கொண்டு புவி வெப்பமடைவதால் ஏற்படும் விளைவுகள், அதிலிருந்து தப்பிக்க பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்து முழக்கம் எழுப்பினர்.



**புவி வெப்பத்தை கட்டுப்படுத்துவதும், பசுமை இல்ல வாயுக்களின் அடர்த்தி 350க்கு மேல் போகாமல் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி மேக்ட் வேர்கள் குழந்தைகள் இயக்கத்தினர் 24.10.2009 சனிக்கிழமை அன்று காலை 10.00 மணி முதல் நண்பகல் 01.00 மணி வரை நடைபெற்ற பரப்புரைகளின்**

## நாளிதழ் பதிவுகள்

தினகரன் ஞாயிற்றுக்கிழமை 25.10.2009



பூமி வெப்பமாவதை தடுப்பது குறித்த விழிப்புணர்வு பிரசாரம் 'மேக்ட்' குழந்தைகள் கூட்டமைப்பு சார்பில், பூந்தமல்லி பஸ் நிலையம் அருகில் நேற்று நடந்தது. காற்றில் கார்பன்-டை-ஆக்சைடின் உச்ச அளவான '350 பார்ட்ஸ் பெர் மில்லியன்' என்பதை வலியுறுத்தும் வகையில் மாணவ, மாணவிகள் அட்டைகளை ஏந்தி பிரசாரம் செய்கின்றனர்.